27th March 1969]

பள்ளியைப் பொறுத்த வரை அவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது 60 ஆகும். ஓய்வு பெறும் வயதை மாற்றியமைக்கும் செயற் குறிப்பு எதுமில்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

Pension to Teachers

* 249 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether a Secondary Grade teacher with over ten years of service, is eligible for pension, when retiring as a member of the Non-teaching staff after further years of such service from the same Aided High School ; and

(*b*) if not, the reasons therefor ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) ஆசிரியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்குப் பொருந்தாது.

Government Arts and Crafts Institutions

* 250 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of diploma holders who passed out of the Government School of Arts and Crafts during 1966–67 and 1967–68 ; and

(*b*) among them, the number of persons who are employed ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) சென்னையில் கலை, கைத் தொழிற் கல்லூரி ஒன்றும், கும்பகோணத்தில் கலை, கைத்தொழிற்பள்ளி ஒன்றும் ஆக அரசாங்கக் கலை, கைத்தொழில் நிலையங்கள் இரண்டு உள்ளன. சென்னையிலுள்ள கலை, கைத்தொழிற் கல்லூரியிலிருந்து 1967-ல் 41 பேரும் 1968-ல் 57 பேரும், 'டிப்ளொமா' பெற்றுத் தேர்ச்சி யடைந்தனர். கும்பகோணம் கலை, கைத்தொழிற் பள்ளியைக் கும்பகோணம் நகராட்சியிடமிருந்து, அரசாங்கம் மேற்கொண்டு இன்னும் ஐந்து ஆண்டு கள் முடிவு பெருத காரணத்தால் இதுவரை இப் பள்ளியிலிருந்து 'டிப்ளொமா' பெற்று எவரும் வெளிவரவில்லை.

(இ) இது குறித்துத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

Fee Concession

* 195 *Q.*—THIRU M. AIYASWAMY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the method adopted for granting fee concession to the sons and daughters of the Non-Gazetted Government Officers in the Pre-University Classes ;

(*b*) whether it is a fact that fee-concession is allowed only from the date of receipt of the N.G.O. Certificate by the college authorities ; and

(*c*) if so, the reasons therefor ?

[27th March 1969

கட்டணச் சலுகை.

திரு. எம். அய்யாசாமி : மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களின் மகன் அல்லது மகளுக்கு புகுமுக வகுப்பில் கட்டணச் சலுகை அளிப்பதற்கு என்ன முறை கையாளப்படுகிறது ?

(இ) அரசிதழ் பதிவு பெறாத ஊழியர் அத்தாட்சியைக் கல்லூரியில் சமர்ப்பிக்கும் தேதிக்குப் பிந்திய நாட்கள் மட்டும் தான் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது என்பது உண்மையா ?

(உ) ஆம் எனில், அதற்குக் காரணமென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்தச் சலுகையைக் கோருகின்ற மாணவரின் பெற்றோர் வாங்கும் சம்பளம், வகிக்கும் பதவி பற்றிய சான்றிதழை, மேற்கூறப்பட்ட கட்டணச் சலுகை வழங்கப்படுவதற்கு முன் சம்பந்தப்பட்ட துறை அல்லது அலுவலகத் தலைவரிடமிருந்து வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று சலுகை வழங்கும் அதிகாரிகளால் வற்புறுத்தப் படுகிறது.

(இ), (உ) வேலைச் சான்றிதழ் கொடுக்கப்பட்ட தேதியைப் பொருட் படுத்தாமல், அச்சான்றிதழ் கல்லூரியில் எந்த நீடிருக்கைப் பருவத்தில் **(term)** கொடுக்கப்பட்டதோ அந்தப் பருவத்தின் தொடக்கத்திலிருந்து மட்டுமே இந்தக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. இந்த நடைமுறை தமிழ் நாடு கல்வி விதிகள், **92**-வது விதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள கட்டணச் சலுகைகள், மற்றும் பிற சலுகைகள் குறித்த நடைமுறையை ஒட்டியதாகவே உள்ளது. எனினும், **1967–68**-ம் ஆண்டைப் பொறுத்த வரையில் கல்லூரியின் இரண்டாவது அல்லது மூன்றாவது நீடிருக்கைப் பருவத்தின் சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டிருந்தும் கூட, கட்டணச் சலுகையை அரசு, ஒரு சிறப்பு தேர்வாக, ஆண்டு முழுவதற்கும் அளிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. எம். அய்யாசாமி : தலைவர் அவர்களே, எற்கனவே பணத்தைக் கட்டிக் கல்லூரியில் சேர்ந்த பொழுதும் கூட, பின்னால் சான்றிதழ் கொண்டு வந்து கொடுத்த பிறகு ஆண்டு முழுவதற்கும் இலவசமாக அனுமதிப்பது கல்லூரிகளில் வழக்கமாக இருந்தது. சென்ற ஆண்டு அரசிதழ் பதிவு பெறாத அலுவலர் ஒருவர் தன் குழந்தைக்கு எற்கனவே கட்டிய பணத்திற்கு சான்றிதழ் கொண்டு வந்து கொடுத்த பிறகும் அதற்குப் பின்னே தான் சலுகை வழங்கப்படும் என்று கூறப்பட்டது. அதற்கு முன்னால் சலுகை இல்லை என்று கூறினார்கள். அந்த நிலை தான் இன்னும் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பி.யு.சி. வகுப்பு இப்போது எல்லோருக்கும் இலவசமாக வந்துவிட்டது. முன்னால் இருந்ததைப்பற்றி பிரச்சனையில்லை. அப்படி தவறு நடந்திருப்பதாகத் தனிப்பட்ட கோரிக்கை வந்தால், அரசாங்கம் அதைப் பரிசீலிக்கலாம்.

New Court Buildings at Madurai

*252 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the stage at which the construction of new Court buildings at Madurai now stands ; and

(*b*) whether any provision is being made for Advocates' Chambers also in the new buildings ?